**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 134/2010** நாள் 15.03.2024

பிவாசா.1, திரு.சஞ்சீவிராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

பட்டா எண் 920 சர்வே எண் 335/6 சொத்து என் தாத்தா பெயரில் இருந்த சொத்து என்றால் இருக்கலாம் தற்போது என் அப்பா பெயரில் உள்ளது . பட்டா எண் 1268 சர்வே எண் 504/1A1 சொத்து தற்போது என் பெயரில் உள்ளது . இதற்கு முன்பு என் தாத்தா பெயரில் அந்த பட்டா இருந்தது . பட்டா எண் 899 சர்வே எண் 238/1 சொத்து கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான் . என் தாத்தாவிற்கு அதில் பாகம் இல்லை . சின்னதாத்தா ரெங்கசாமிக்கு கொடுத்துவிட்டார்கள். பட்டா எண் 899 சொத்து என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. பட்டா எண் 928 சர்வே எண் 530/1 ல் கண்ட சொத்து என் தாத்தாவின் சொத்து என்றால் பூர்வீக சொத்து தான் . பட்டா எண் 3028 சர்வே எண்கள் 1195/1C, 1195/3C1 என் தாத்தா பெயரில் இருந்த சொத்து என்றால் சரிதான். தற்போது உயில் சாசனப்படி எனக்கு வந்த சொத்து . தற்போது என் பெயரில் உள்ளது என்றால் சரிதான் . பட்டா எண் 3025 சர்வே எண் 1195/3B1 எனது தாத்தா பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான் . அது கிணறு. பட்டா எண் 504 சர்வே எண் 335/5 சொத்து என் தாத்தா பெயரில் இருந்த சொத்தா என்றால் இல்லை . பட்டா எண் 504 பெயர் மாற்றம் செய்வதற்கு என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் எனக்கு தெரியாது எனது அப்பா தான் பெயர் மாற்றினார். எதிர் வழக்குரையில் வாய்மொழி பாகம் மூலமாக எந்த வருடம் எந்த தேதியில் பாகம் கிடைத்தது என்று குறிப்பிடவில்லை என்றால் அது தவறு . பஞ்சாயத்து மூலமாகத்தான் 1986 கிடைத்தது. எதிர் வழக்குரையில் வாய்மொழி விடுதலை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாய்மொழி பாகம் ஏற்பட்டது கிடையாது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ–12 ல் கண்ட சொத்துக்களில் என் தாத்தாவிற்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். சின்னதாத்தாவிற்கும் பாகம் உள்ளது. பிவாசாஆ–12 ல் என் அப்பாவும் சேர்ந்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . பிவாசாஆ–12 ல் 1,2,3 தரப்பினர்களின் தகப்பனாருக்கு கூட்டு பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எனது தகப்பனார் பிவாசாஆ –12 ல் எனது பாகத்திற்கு வந்த சொத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது . வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றாலும் நான் பட்டாக்களை எனது பெயரில் உற்பத்தி செய்து கொண்டேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 15th day of March 2024.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.